Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, SRIVILLIPUTTUR
STC NO.419/2023

**Depositions of PW- 1**

| Name | திருமதி.துர்கா | Occupation | தொழிலாளர் உதவி ஆய்வாளர் 2ம் சரகம் சிவகாசி |
|---|---|---|---|
| Husband name | சிவக்குமார் | Calling | |
| Village | சிவகாசி | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 03rd day of January 2026.

03.01.2026

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் தற்போது சிவகாசியில் குடியிருந்து வருகிறேன். நான் தொழிலாளர் உதவி ஆய்வாளராக வேலை பார்த்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். பொதுவாக விருதுநகர் மாவட்ட ஆட்சியரின் உத்தரவின்படி மாதந்தோறும் குழந்தைகள் மற்றும் வளரிளம் பருவ தொழிலாளர்கள் தொடர்பாக கூட்டாய்வு மேற்கொள்வது வழக்கம். கடந்த 2022ம் ஆண்டு டிசம்பர் மாதம் ஒரு நாள் கூட்டாய்விற்காக நானும், குழந்தை நல குழும உறுப்பினர் ராஜகோபால் என்பவரும், Child line கள பணியாளரான அன்பு செல்வி என்பவரும், குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் அலுவலகத்தின் கள பணியாளரான சாந்தி ஆகியோர்கள் சேர்ந்து ஆய்வு மேற்கொண்டபோது திருவில்லிபுத்தூர் ராஜாஜி ரோட்டிலுள்ள ஆனந்தா பேக்கரியில் அய்யனார் என்ற வளரிளம் பருவ சிறுவன் வேலை செய்து வந்தது தெரியவந்தது. அதன் பின் மேற்படி சிறுவனிடம் விசாரணை மேற்கொண்டு ஆய்வறிக்கையில் அவர் கூறிய சங்கதிகளை எழுதிக்கொண்டேன். அதன் பின் என்னுடன் வந்த மேற்படி நபர்களிடமும் ஆய்வறிக்கையில் கையெழுத்து பெற்றேன். அதன் பின்பு கூட்டாய்வை முடித்து எங்களது அலுவலகத்திற்கு வந்த பின்பு மேற்படி சிறுவனின் ஆதார்அடையாள அட்டை

பெற்று பார்த்தபோது அவரது பிறந்த வருடம் 2005 என்று குறிப்பிடப்பட்டிருந்தது. அதன் பின்பு மேற்படி ஆனந்தா பேக்கரியின் உரிமையாளரான கனகராஜ் என்பவருக்கு குற்ற இசைவு தீர்வு குறிப்பாணை அனுப்பப்பட்டது. மேற்படி குறிப்பாணைக்கு அவர் பதில் அனுப்பாததால் அவர்மீது வழக்கு தாக்கல் செய்ய விருதுநகர் தொழிலாளர் உதவி ஆணையரிடம் (அமலாக்கம்) அனுமதி பெறப்பட்டு ஆஜர் எதிரி மீது வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. என்னிடம் காட்டப்படும் விளக்கம் கேட்கும் அறிவிப்பு என்னால் தான் அனுப்பப்பட்டது. அதிலுள்ள கையெழுத்து என்னுடையதுதான். **மேற்படி அறிவிப்பு அசாஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி சிறுவனுக்கு சம்பவ சமயத்தில் 18 வயது பூர்த்தியாகவில்லை என்பதை உறுதிப்படுத்துவதற்கு தாக்கல் செய்யப்பட்ட அய்யனார் என்பவர் அழகப்பா பல்கலைக்கழகத்தில் படித்ததற்கான Hall ticket மற்றும் அவரது ஆதார் அடையாள அட்டை நகல் அசாஆ.2 மற்றும் 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. ஆய்வறிக்கை அசாஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>

இல்லை.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிகளிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.2,
திருவில்லிப்புத்தூர்.

Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, SRIVILLIPUTTUR
STC NO.419/2023

**Depositions of PW- 2**

| Name | திருமதி.அன்புச்செல்வி | Occupation | Child Help line குழும உறுப்பினர் |
|---|---|---|---|
| Husband name | சித்திவிநாயகம் | Calling | |
| Village | திருவில்லிபுத்தூர் | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 03rd day of January 2026.

03.01.2026

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் தற்போது திருவில்லிபுத்தூரில் குடியிருந்து வருகிறேன். நான் Child Help line குழும உறுப்பினராக வேலை பார்த்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். கடந்த 28.12.2022 அன்று நானும் அசா.1 மற்றும் குழந்தை நல குழும உறுப்பினர் ராஜகோபால் என்பவரும், குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் அலுவலகத்தின் கள பணியாளரான சாந்தி ஆகியோர்கள் சேர்ந்து ஆய்வு மேற்கொண்டபோது திருவில்லிபுத்தூர் ராஜாஜி ரோட்டிலுள்ள ஆனந்தா பேக்கரியில் அய்யனார் என்ற வளரிளம் பருவ சிறுவன் வேலை செய்து வந்தது தெரியவந்தது. அந்த சிறுவனிடம் சென்று கேட்டபோது அவரது பெயர் அய்யனார் என்பது தெரியவந்தது. அவரது வயது பற்றி கேட்டபோது தான் கல்லூரியில் படித்து வருவதாக கூறினார். ஆனால் அவரது ஆதார் அடையாள அட்டையை வாங்கி பார்த்தபோது அவர் 18 வயது பூர்த்தியடையாத சிறுவன் என்பது தெரியவந்தது. அதன் பின்பு மேற்படி சிறுவனின் அடையாள அட்டைகளை எடுத்துக்கொண்டு எங்களது அலுவலகத்திற்கு வருமாறு கூறிவிட்டு நாங்களும் அலுவலகத்திற்கு சென்றுவிட்டோம். அதன் பின்பு இவ்வழக்கின் மற்ற விவரங்களை அசா.1 பார்த்துக்கொண்டார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–**

இல்லை.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிகளிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.2,
திருவில்லிப்புத்தூர்.

Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, SRIVILLIPUTTUR
STC NO.419/2023

**Depositions of PW- 3**

| | | | |
|---|---|---|---|
| Name | திருமதி.சாந்தி | Occupation | மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலக புறதொடர்பு பணியாளர் |
| Husband name | கருப்பசாமி | Calling | |
| Village | திருவில்லிபுத்தூர் | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 03rd day of January 2026.

03.01.2026

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் தற்போது திருவில்லிபுத்தூரில் குடியிருந்து வருகிறேன். நான் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலக புறதொடர்பு பணியாளராக வேலை பார்த்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். கடந்த 28.12.2022 அன்று நானும் அசா.1 அசா.2 மற்றும் குழந்தை நல குழும உறுப்பினர் ராஜகோபால் என்பவரும் சேர்ந்து ஆய்வு மேற்கொண்டபோது திருவில்லிபுத்தூர் ராஜாஜி ரோட்டிலுள்ள ஆனந்தா பேக்கரியில் அய்யனார் என்ற வளரிளம் பருவ சிறுவன் வேலை செய்து வந்தது தெரியவந்தது. அந்த சிறுவனிடம் சென்று கேட்டபோது அவரது பெயர் அய்யனார் என்பது தெரியவந்தது. அவரது வயது பற்றி கேட்டபோது தான் கல்லூரியில் படித்து வருவதாக கூறினார். அவரது பிறந்த தேதி பற்றி கேட்டபோது அவர் 18 வயது பூர்த்தியடையாத சிறுவன் என்பது தெரியவந்தது. அதன் பின்பு மேற்படி சிறுவனின் அடையாள அட்டைகளை எடுத்துக்கொண்டு எங்களது அலுவலகத்திற்கு வருமாறு கூறிவிட்டு நாங்களும் அலுவலகத்திற்கு சென்றுவிட்டோம். அதன்படி மேற்படி சிறுவனும் அவரது அடையாள அட்டைகளை எடுத்துக்கொண்டு எங்களது அலுவலகத்திற்கு வந்தார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

இல்லை.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிகளிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.2,
திருவில்லிப்புத்தூர்.